செய்தி வெளியீடு எண் : 1296 நாள் : 27.08.2024

## செய்தி வெளியீடு

## பொதுவிநியோகத் திட்ட இன்றியமையாப் பொருட்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் வழங்கிட உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றிடவும், எதிர்வரும் காரீஃப் சந்தைப்பருவம் (2024–25) 01.09.2024– முதல் ஆரம்பிக்க உள்ள நிலையில் நெல் கொள்முதலுக்குத் தேவையான முன்னேற்பாடு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் – மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் அலுவலர்களுக்கு ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தினார்.

மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. அர. சக்கரபாணி அவர்கள் தலைமையில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அலுவலர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர்கள்/ மண்டல மேலாளர்கள், தரக்கட்டுப்பாட்டு அலுவலர்கள், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன அலுவலர்கள், கூட்டுறவுத் துறையின் பொது விநியோகத் திட்ட துணைப் பதிவாளர்கள், குடிமைப் பொருள் வழங்கல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை அலுவலர்களின் ஒருங்கிணைந்த ஆய்வுக் கூட்டம் இன்று (27.08.2024) சென்னை, கோட்டூர்புரத்தில் அமைந்துள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறையின் 2024–25 ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்புகள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், காலிப் பணியிடங்களை நிரப்புதல், நீதிமன்ற வழக்குகளை விரைந்து முடித்தல், சிறப்பு பொது விநியோகத் திட்டப் பொருட்களான துவரம் பருப்பு, பாமாயில் ஆகியவற்றின் ஆகஸ்டு, செப்டம்பர் மாதத்திற்கான இருப்பு, நியாய விலைக்கடைகளுக்கான நகர்வு, எதிர்வரும் காரீஃப் 2024–25 ஆம் ஆண்டு பருவத்தின் நெல் கொள்முதலுக்கான முன்னேற்பாடுகள், குடும்ப

அட்டைதாரர்களுக்கான பொருள்களின் விநியோகம், புதிய மின்னணு குடும்ப அட்டைகள் வழங்குதல் குறித்த நடவடிக்கைகளை ஆய்வு செய்தார்.

குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகளில் அனைத்துப் பொருட்களும் தரமானதாகவும், உரிய நேரத்தில் கிடைத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொண்டு, நியாய விலைக் கடைகளுக்கு வருகை தரும் குடும்ப அட்டைதாரர்களிடம் இன்முகத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்றும், முன்மாதிரி அங்காடிகளாக நியாய விலைக் கடைகளை மாற்றுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினை ஆய்வு செய்தும், தேவைப்படும் இடங்களில் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப புதியதாக பகுதி மற்றும் முழு நேர நியாயவிலை அங்காடிகளை திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும், புதிய குடும்ப அட்டைகள் வேண்டி பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளை விரைந்து அச்சிட்டு வழங்கிடும்படியும், மீதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு களவிசாரணை மற்றும் விண்ணப்பங்கள் சரிபார்க்கும் பணியினை விரைந்து முடித்து தகுதியுள்ள குடும்பங்களுக்கு புதிய குடும்ப அட்டைகளை விரைந்து வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தினார்.

விவசாயிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படி எதிர்வரும் கரீப் 2024–25 ம் பருவத்தில் ஒரு மாதம் முன்பாகவே 01.09.2024 முதல் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்திட ஒன்றிய அரசிடமிருந்து அனுமதி பெற்றுள்ள நிலையில், நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதாரவிலையுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் சன்னரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.130/– பொதுரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.105/– என்ற அளவில் உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ள ஊக்கத் தொகையினை விவசாயிகள் தெரிந்து கொள்ளவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் தேவையான நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை உடனடியாகத் திறந்திடவும், நேரடி நெல்

கொள்முதல் நிலையங்களைக் கண்காணித்திட அமைக்கப்பட்டுள்ள குழுவிற்கு முழு ஒத்துழைப்பினை நல்கிடவும், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் ஏதும் குறைபாடு இருப்பின் அதை உரிய அலுவலர்களுக்குத் தெரிவிக்கும் வகையில் துறை அலுவலர்களின் தொலைபேசி எண்கள் அடங்கிய அறிவிப்புப் பலகைகள் மற்றும் புகார் பெட்டிகள் அனைத்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் வைத்திடவும், நெல்லினைப் பாதுகாப்புடன் சேமித்து வைக்க ஏதுவாக தேவையான அளவு பாலித்தீன் தார்ப்பாய்கள் மற்றும் வெட்டுக் கற்கள் இருப்பு வைத்திடவும் அறிவுறுத்தினார்கள்.

அமுதம் அங்காடிகளை மாவட்டம் தோறும் திறந்து குறைந்த பட்சம் 100 அங்காடிகளைத் திறந்து மக்களுக்குத் தரமாகவும் வெளிச்சந்தை விலையை விடக் குறைவாகவும் பொருட்கள் வழங்கிட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை அலுவலர்கள் பொது விநியோகத் திட்டப் பொருட்கள் கடத்தல் மற்றும் பதுக்கலைத் தடுப்பதற்கு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமெனவும், கைப்பற்றப்பட்ட வாகனங்களை விரைந்து ஏலம் விடவும், அரிசிக் கடத்தலை அறவே ஒழித்திட தமிழ்நாட்டின் எல்லையோர அண்டை மாநிலங்களின் அதிகாரிகளுடன் இணைந்து அடிக்கடி கூட்டங்கள் நடத்திடவும் அறிவுறுத்தினார்கள்.

மேலும் உணவுத் துறை அலுவலர்கள் கூட்டுறவுத் துறையின் அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றி பொது விநியோகத் திட்டத்தினைத் திறம்பட செயல்படுத்திட வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்கள்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் கிடங்குகளின் கொள்ளளவினை அதிகரித்து, குளிர்சாதன வசதியுடன் கிடங்குகள் கட்டிட நடவடிக்கைகள் மேற்கொண்டு, வருவாயினை அதிகப்படுத்திட வேண்டுமெனவும், மாநில குறைதீர் ஆணையத்தின் வழக்குகளை உடனுக்குடன் விரைந்து தீர்வு செய்து நுகர்வோர் பாதுகாப்பினை உறுதி செய்யவும் அறிவுறுத்தினார்கள்.

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களின் அறிவுரைகளைப் பின்பற்றி துறைவாரியாக மாவட்ட அலுவலர்கள் ஆய்வு செய்து, உணவுத் துறை மற்றும் கூட்டுறவுத் துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பொது விநியோகத் திட்டத்தினை மேலும் சிறப்பாகச் செயல்படுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு. சு. பழனிசாமி, இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குனர், திரு. ஆ. அண்ணாதுரை, இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குனர், திரு. த. மோகன், இ.ஆ.ப., குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் காவல் துறை இயக்குனர் திருமதி சீமா அகர்வால், இ.கா.ப., குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு காவல் துறைத் தலைவர் திரு. க. ஜோஷி நிர்மல் குமார், இ.கா.ப., உணவுப் பொருள் வழங்கல் துறை துணை ஆணையாளர்கள், மாவட்ட வழங்கல் அலுவலர்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர்கள்/மண்டல மேலாளர்கள், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவன அலுவலர்கள், கூட்டுறவுத் துறையின் பொது விநியோகத் திட்டத் துணைப் பதிவாளர்கள் மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத் துறையின் காவல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu